# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>ந.க.எண் : 1373/ 2011 / எம்சி. 8 நாள் : 18.02 .2011</u>

<u>அய்யா /அம்மா,</u>

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 2011-12ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை - சிறப்புக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2011-12ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம் வருகின்ற 23.02.2011 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற நிதிநிலை அறிக்கை - சிறப்புக் கூட்டம்
## பிப்ரவரி 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | கோயம்புத்துார் மாநகராட்சி – பொது நிதி, குடிநீா் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி - 2010-11ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மற்றும் 2011-12 ம் ஆண்டிற்கான திட்ட வரவு, செலவு மதிப்பீடு - நிதிநிலை அறிக்கை சமா்ப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக. | 2 |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.**

(குறள் -385)

**விளக்கம்**

**முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.**

**திருவள்ளுவர்.**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி – 2010-2011 ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மற்றும் 2011-2012 ம் ஆண்டிற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடு - ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதிகளின் 2010-2011 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2011-2012 ம் ஆண்டிற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவுள்ள பணிகளுக்கான வரவு செலவு அறிக்கையும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண்.125, நாள் 10.02.2011-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே 2010-2011 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2011-2012 ம் ஆண்டிற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவுள்ள பணிகளுக்கான வரவு செலவு அறிக்கையும் மாமன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 1/2011/பி-1

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி